# தூய லூர்து அன்னை திருப்பீடம்


தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.்.பியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624



நாள் 13 - 08 - 2017 இதழ் 38


## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி

**சனி** மாலை 6:00மணி மற்றும் மாலை 7:30மணி

**ஞாயிறு (ஆங்)** காலை 7.30மணி,11.30மணி மற்றும் மதியம் 1:00மணி

**ஞாயிறு (தமிழ்)** காலை 9:30மணி மற்றும் மாலை 6:30மணி

**பொது விடுமுறை** காலை 9:00மணி (ஆங்) காலை10:00மணி(தமிழ்)

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

(முதல் ஆண்டு)

## பொது காலம் 19ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :** 1 அரசர்கள் : 19:9a,11-13a

**பதிலுரைப் பாடல் :** திபா : 85:8ab,9.10-11.12-13

**பல்லவி :** ஆண்டவரே, உம் பேரன்பையும் மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

**இரண்டாம் வாசகம்:** உரோ 9:1-5

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:** “அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன். என் நெஞ்சம் காத்திருக்கின்றது. அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன். அல்லேலூயா.”

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 14:22-33

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

**GIFT விசுவாசத்துடனும் நன்றியறிதலுடனும் கொடுத்தல் திட்டத்திற்கான நினைவூட்டல்**

அடுத்த வாரயிறுதியில், கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும்.

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி**

தேதி : ஞாயிறு, 27-08-2017
நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30மணி முதல் 4.00மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

**அன்னை மரியாளின் விண்ணேற்பு பெருவிழா**

திருப்பலி நேரங்கள்

தேதி : திங்கள், 14-08-2017
நேரம் : மாலை 6:30மணி (ஆங்கிலம்)

தேதி : செவ்வாய், 15-08-2017
நேரம் : மதியம் 12:30மணி (ஆங்கிலம்),
மாலை 6:30மணி (ஆங்கிலம்)
இரவு 8:00மணி (தமிழ்)

**புனித வின்செண்ட் தே பவுல் சபை**

புனித வின்செண்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காக இம்மாதம் முதல் ஞாயிறு இறைமக்கள் அளித்த காணிக்கை $3,945.55 வெள்ளிகள். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

இம் மாதம் புனித வின்செண்ட் தே பவுல் சபையின் வழியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை $5,810.00 வெள்ளிகள்.

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டுப் பெருவிழா - 2017

ஆண்டுதோறும் நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

10-09-2017, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

**அனைவரும் வருக!**

**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆசீர் பெறுக!**

இன்றைய நவநாளை சிறப்பிப்போர்: கிறிஸ்து அரசர் ஆலயம்.
அடுத்தவார நவநாளை சிறப்பிப்போர்: புனித அன்னாள் ஆலயம்.

**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவ வேண்டுகின்றோம். உங்களின் நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் கொடுத்து உரிய ரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.**



**திருவிழா நாளன்று திருப்பலி கருத்துக்கள் எழுதி வாசிக்கப்படும்.**

# சிந்தனை

அன்புடையீர்,
இன்று ஆண்டின் பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு. இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு, அவர் தம் கரம்பிடித்து நிலைவாழ்வை நோக்கி கடலில் நடந்திட உற்சாகமாக வந்த பேதுருவைப் போல ஆலயம் வந்துள்ள இறைமக்களே உங்கள் வரவு நல்வரவாகுக.

இன்றைய நற்செய்தியில், இயேசு தந்தையாம் கடவுளோடு அமர்ந்துச் செபித்த பின்பு, இயேசு அதே அனுபவத்தோடு, அவர் தண்ணிரில் நடந்தார். இயேசு அடிக்கடித் தனிச் செபத்தில் நீண்டநேரம் செலவழிப்பவர். இந்தச் செபத்திற்கு அப்படி என்ன முக்கியத்துவம்? நமது குடும்பங்களிலும், பணியிடங்களிலும், சமூகத்திலும், இறைவனுக்காக நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. நாம் சோர்வில்லாமல் தொடர்ந்து இறைவனுக்காகப் பணியாற்ற, நாம் இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட இறைவனை மன்றாடுவோம்.

நமது ஆற்றலைப் புதுப்பிக்க, அடிக்கடிச் செபத்தில் நமது நேரத்தைச் செலவிட்டு, இறைவனைப் பற்றி இன்னும் அறிந்து, அவர் எப்படி நம்மை வழி நடத்துகிறார் என அறிந்து, நம்மை நாமே மாற்றிகொள்வது நல்லது. நமக்கு என்ன நடந்தாலும், அதனை எதிர்கொள்ளச் செபம் நமக்குப் பெரிதும் உதவுகிறது.

நாம் தனியாக இறைவனிடம் செபிக்கும் வேளையில், அவரிடமிருந்து நாம் பெறும் ஆசியும் அருளும் நமக்கான அன்பளிப்பாகும். அந்த அன்பளிப்பின் மூலம், பிறருக்கு நாம் உதவ முடியும். இது நமது விசுவாசத்தை இன்னும் உறுதியாக்கும். துன்பம் என்னும் கடலில் நாம் எப்படி நடப்பது என நமக்குக் கற்றுக் கொடுக்கும்.

இன்றைய திருப்பலியில் இயேசுவைப்போல் நாமும் தந்தையாம் இறைவனிடம் ஒருமனப்பட்டுச் செபிக்கவும், அவருக்காய் நாம் செய்யும் பணிகள் வெற்றிப் பெற இறையருள் வேண்டிடுவோம்.

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |
| புனித அன்னாள் ஆலயம்<br>66, செங்காங் ஈஸ்ட் வே | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30 |

### அருள்தந்தையர்

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் (frmichaelsitaram@gmail.com) - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை பால் இயோ (fryeopaul@gmail.com) - உதவிப் பங்குத்தந்தை

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore

அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.